



ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM · VARALARUU · PUDUGAIVARALARU · YouTube VARALARUU · 7502051351

ஞாயிறு ❖ நவம்பர். 19, 2023 · சென்னை & புதுக்கோட்டை · 4 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 45 ❖ ரூ.10






### ஆளுநர் திருப்பி அனுப்பிய 10 மசோதாக்கள் மீதான தமிழக அரசின் தனித் தீர்மானம்

# நிறைவேற்றம்

## அவசர, அவசியம் கருதி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதியும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டி சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது: முதல்வர் ஸ்டாலின்

சென்னை, நவ. 19–

தமிழக ஆளுநர் ஆர். என்.ரவியால் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்ட 10 சட்ட மசோதாக்களை மீண்டும் சட்டப்பேரவையில் மறு ஆய்வு செய்து நிறைவேற்றிட வகை செய்யும் முதல்வர் ஸ்டாலின் கொண்டுவந்த அரசின் தனித் தீர்மானம் நேற்று தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. குரல் வாக்கெடுப்பு மூலம் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், சட்டப்பேரவைக் கூட்டம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.



தமிழக ஆளுநரால் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப் பெற்ற சட்ட மசோதாக்களை மீண்டும் சட்டப்பேரவையில் மறு ஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித் தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்தார். அப்போது அவர் தனது உரையில், “தமிழ்நாட்டுக்கான திட்டங்கள்–தமிழ்நாட்டை வளப்படுத்தும் திட்டங்களாக மட்டுமல்ல, இந்தியாவுக்கான வழிகாட்டும் திட்டங்களாக அமைந்து வருகின்றன. இத்தகைய சூழ்நிலையைக் கெடுக்கும் வகையில் என்று கூடச்சொல்லமாட்டேன்; தடுக்கும் வகையில் சில இடையூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். நிதி நெருக்கடி, ஒன்றிய அரசின் சில இடையூறுகள் இவை மட்டும் இல்லாமல் இருந்தால் இன்னும் பல திட்டங்களை எங்களால் செய்து காட்ட முடியும் என்று இதே மாமன்றத்தில் ஓராண்டுக்கு முன்னதாக நான் குறிப்பிட்டதையும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இடையூறுகள் என்று நான் சொன்னதன் விளைவாகத்தான் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியதாக உள்ளது. பொதுவாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டங்கள், முக்கிய நிகழ்வுகளுக்காகவும், முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும் கூட்டப்படுவது வழக்கம். அதேபோல் நாம் இன்றைக்குகூட்டியிருக்கும் சிறப்புக் கூட்டம், அவசர, அவசியம் கருதி, ஒட்டுமொத்ததமிழ்நாட்டு மக்களின் நலன் கருதியும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலும், அரசமைப்புச்சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியும் கூட்டப்பட்டுள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் ஆளுநர். “*I withhold assent*” அதாவது, தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, நாம் இங்கு நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவுகளை கடந்த 13.11.2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை நாம் இங்கே மீண்டும் நிறைவேற்றி, அவரது ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பி வைக்க இருக்கிறோம். அதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மைமிக்க ஓர் அரசால், மாநில நலன் கருதி சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தர வேண்டியது ஆளுநரின் கடமை. அவருக்கு அதில் சட்டரீதியாக அல்லது நிர்வாக ரீதியாக ஏதேனும் தெளிவுரை தேவைப்பட்டால், அதனை அவர் அரசிடம் கோரலாம். அதனை அரசு வழங்க வேண்டும். அந்தவகையில்

4பக்கம் பார்க்க

## ஆளுநரால் மசோதாக்கள் நிராகரிப்பா, நிறுத்திவைப்பா?: பேரவையில் காரசார விவாதம்

சென்னை , நவ. 19–

ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றும் பொருட்டு தமிழக சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் நேற்று கூடியதையடுத்து பேரவையில் முதல்வர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் இடையே காரசார விவாதம் நடைபெற்றது. முதல்வர் கொண்டுவந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, ”ஆளுநர் இந்த 10 சட்ட மசோதாக்களையும் நிராகரிக்கவில்லை, நிறுத்தி வைத்துள்ளதாகவே நான் கருதுகிறேன்" என்று தெரிவித்தார். இதற்கு அமைச்சர்கள் எதிர்வினையாற்றினர்.



சட்டப்பேரவையில் எடப்பாடி பழனிசாமி பேசுகையில். "ஆளுநர் இந்த 10 சட்ட மசோதாக்ளையும் நிராகரிக்கவில்லை, நிறுத்தி வைத்துள்ளதாகவே நான் கருதுகிறேன். ஆளுநர் மசோதாக்களை With-Hold செய்திருப்பதாக தெரிவித்திருக்கிறார். அதாவது, நிறுத்தி வைப்பதாக தெரிவித்திருக்கிறார். நிராகரிக்கப்பட்டது என்று தெரிவிக்கவில்லை. இதன் மூலம் மசோதாக்கள் நிலுவையில் இருப்பதாகத்தான் பொருள்படுகிறது. எனவே, மசோதாக்களை மறு ஆய்வு செய்வதில் சட்டச் சிக்கல் இருக்கிறதா என்பதை தமிழக அரசுதான் ஆய்வு செய்ய வேண்டும்" என்றார்.

இதற்கு பதிலளித்த தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி “ஆளுநர் நிலுவையில் வைக்கவில்லை. திருப்பி அனுப்பி வைத்துள்ளார். ஏதோ ஒரு சட்ட மசோதாவில் அளித்த ஆலோசனையின் பேரில் கெட்டிக்காரத்தனமாக செயல்படுவதைப் போல ஆளுநர் நினைத்துக் கொண்டிருக்கிறார்" என்று விமர்சித்தார். அதைத் தொடர்ந்து பேசிய அமைச்சர் தங்கம் தென்னரசு “ஆளுநருக்கோ, குடியரசுத் தலைவருக்கோ சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை அனுப்பி வைக்கும்போது, With Hold என்று சொல்வது நிராகரிப்பதாகவே பொருள்” என்று விளக்கினார்.

அதைத் தொடர்ந்து பேசிய சபாநாயகர் அப்பாவு, “மசோதாக்களை ஆளுநர் WithHold செய்கிறார் என்றால், அதை ஒப்புதல் அளிக்காமல் நிராகரிக்கிறார் என்றே பொருள். மசோதாக்களை மறு ஆய்வு செய்வதற்கான அனுமதி அளிக்க சபாநாயகர் என்ற அடிப்படையில் எனக்கு அதிகாரம் இருக்கிறது. எந்தவித மாற்றங்களும் இல்லாமல் மசோதாக்கள் திருப்பி அனுப்பப்படும். ஆளுநர் அதற்கு ஒப்புதல் தரவேண்டும்” என்றார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய எடப்பாடி பழனிசாமி, "அமைச்சர் சொல்ல வேண்டிய கருத்துகளை எல்லாம் சபாநாயகர் நீங்களே தெரிவித்து விடுகிறீர்கள். அனைத்து இலாகாக்களையும் நீங்களே வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு அமைச்சருக்கு என்றும் தனியாக இலாகா உள்ளது. ஆனால், எதைப் பேசினாலும் ஒரு சிலரே எழுந்து பேசுகிறார்கள். அவர்களின் இலாகா வரும்போது பேசினால் சரி” என்றார்.

மேலும் பேசிய இபிஎஸ், ”உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு விட்டது. உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் தீர்ப்பு வருவதற்கு முன்பே ஏன் சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்ட வேண்டும்? அந்த வழக்கிலேயே நல்ல தீர்ப்பு கிடைத்து விட்டால் இந்த சிறப்பு கூட்டம் கூட்டியதற்கு அவசியம் இல்லாமல் போயிருக்கும். ஏன் இந்த அவசரம். அனைத்து மசோதாக்களையும் சுட்டிக்காட்டி வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதா? முதல்வரை வேந்தராக்கும் மசோதா அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட போது அதை திமுக எதிர்த்தது. யாருக்கும் வக்காலத்து வங்கி பேச வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. ஆளுங்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடு, எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு நிலைப்பாடா? அப்போதே துணை வேந்தர் நியமனம் குறித்து நாங்கள் கொண்டுவந்த தீர்மானத்தை நீங்கள் ஆதரித்திருக்கலாம். துணை வேந்தர்கள் நியமனம் என்பது எப்போதும் ஒரே மாதிரிதான் நடைபெறுகிறது” என்றார்.

இதுக்கு பதிலளித்த அமைச்சர் துரைமுருகன், “பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் அரசின் ஆலோசனையை ஆளுநர் ஏற்க மறுக்கிறார். முந்தைய காலங்களில் முதல்வர் உடன் கலந்து பேசிதான் துணை வேந்தர்கள் நியமிக்கப்பட்டார்கள்” என்று விளக்கமளித்தார். இவ்வாறாக, ஆளுநரின் செயல்பாடு, பல்கலைக்கழக துணை வேந்தர் தேர்வு குறித்து காரசாரமாக விவாதம் நடந்த நிலையில், அதிமுக வெளிநடப்பு செய்தது குறிப்பிடத்தக்கது.

## “டீப்ஃபேக் வீடியோக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால்..?” சமூக ஊடகங்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை

புதுடெல்லி , நவ. 19–

டீப்ஃபேக் வீடியோக்கள் விஷயத்தில் சமூக ஊடகங்கள் விரைவானதும், தீவிரமானதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு இருக்காது என்றும் மத்திய அரசு எச்சரித்துள்ளது.



டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், டீப்பேக் வீடியோக்கள் விஷயம் தொடர்பாக சமூக ஊடகங்களுக்கு அரசு சமீபத்தில் நோட்டீஸ் அனுப்பியது. அவர்களும் பதில் அளித்திருக்கிறார்கள். சமூக ஊடக நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், இன்னும் கூடுதலான நடவடிக்கைகளை அவை எடுத்திருக்க வேண்டும். விரைவில் நாங்கள் சமூக ஊடக நிறுவனங்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்த உள்ளோம். இன்னும் 3-4 நாட்களில் இந்தக் கூட்டம் நடக்கும். அப்போது, இந்தப் பிரச்சினையின் தீவிரம் அவர்களுக்கு உணர்த்தப்படும். டீப்ஃபேக் வீடியோக்களை தடுக்கவும், தங்கள் சேவைகளை தூய்மையாக வைத்துக்கொள்ளவும் அவர்கள் மிகத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என தெரிவித்தார்.

மெட்டா, கூகுள் பேன்ற நிறுவனங்களும் அழைக்கப்படுமா என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், நிச்சயமாக அழைக்கப்படும் என கூறினார். மேலும், "தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவு மூலம் தற்போது சமூக ஊடக நிறுவனங்கள் பாதுகாப்பை பெற்று வருகின்றன. இதன் மூலம் அவர்கள் தங்கள் தொழிலை விரிவுபடுத்தி வருகிறார்கள். ஆனால், அரசின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப டீப்ஃபேக் வீடியோக்கள் விஷயத்தில் சமூக ஊடக நிறுவனங்கள் உரிய நடவடிக்கையை எடுக்காவிட்டால், அவர்கள் தங்களுக்கு இருக்கும் பாதுகாப்பை தொடர்ந்து எதிர்பார்க்க முடியாது" என்றும் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நடிகைகள் ராஷ்மிகா மந்தனா, கத்ரினா கைஃப், கஜோல் ஆகியோரின் முகங்களை வேறு சிலரின் முகங்களோடு பொருத்தி வெளியிடப்பட்ட மிக மோசமான டீப்ஃபேக் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகின. இதையடுத்து, சம்பந்தப்பட்ட நடிகைகள் இது குறித்து தங்கள் கவலைகளை வெளிப்படுத்தி இருந்தனர். செயற்கை நுண்ணறிவு செயலியைக் கொண்டு இவ்வாறு வீடியோக்கள் தயாரிக்கப்பட்டது தெரிய வந்தது. இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி, பெண்களோடு சேர்ந்து கார்பா நடனம் ஆடுவதாக சமீபத்தில் வீடியோ ஒன்று இணையத்தில் வைரலானது.

இதையடுத்து, டெல்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மோடி, "நான் கார்பா நடனம் ஆடியது போன்ற ஒரு வீடியோவை சமீபத்தில் பார்த்தேன். இதுபோன்ற பல வீடியோக்கள் இணையதளத்தில் வைரலாகி வருகின்றன. இதுபோன்ற போலி வீடியோக்கள் மிகவும் கவலை அளிக்கின்றன. இது குறித்து சாட்ஜிபிடி குழுவினருடன் பேசி, எச்சரித்துள்ளேன். செயற்கை நுண்ணறிவு செயலி மூலம் இதுபோன்ற வீடியோக்கள் தயாரிக்கப்படுகின்றன. தொழில்நுட்பம் பொறுப்புடன் கையாளப்பட வேண்டும். ஊடகங்கள் இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இதுபோன்ற போலி வீடியோக்களை தயாரித்து வெளியிடுபவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் கடந்த வாரம் எச்சரித்தார். "இதுபோன்ற வீடியோக்களை தயாரித்து வெளியிடுபவர்கள், பரப்புபவர்கள் மீது தகவல் தொழில்நுட்ப சட்டம் 2021-ன்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் கூறி இருந்தார். இந்த சட்டப்படி அதிகபட்சம் ரூ.1 லட்சம் அபராதம் மற்றும் 3 ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## “தமிழகத்திலும் பாஜக ஆட்சி வருவதற்கு நீண்ட காலம் ஆகாது” எல்.முருகன் நம்பிக்கை

புதுச்சேரி , நவ. 19–

“புதுச்சேரியில் விழாவுக்கு வந்த பெரும்பாலான பழங்குடியின மக்கள் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். இடமில்லாதவர்கள் தரையில் அமர்ந்திருந்ததை சர்ச்சையாக்கியது அவசியமற்றது” என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.



அவர் புதுச்சேரியில் நேற்றுசெய்தியாளர்களிடம் கூறியது: “ஆளுநர் அலுவலகத்தில் இருந்த 10 மசோதாக்களை தமிழக அரசு மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியுள்ளது. அதைப் பரிசீலித்து ஆளுநர் நடவடிக்கை எடுப்பார். தமிழக அரசு அனுப்பிய கோப்புகளை ஆளுநர் திருப்பி அனுப்புவது குறைகளை கேட்டு அனுப்புவதற்காக தான். அதற்கான உரிய பதிலை கொடுத்தால் ஆளுநர் பரிசீலிப்பார்.

தமிழகத்தில் விவசாயிகளை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்திருப்பது மிகவும் கண்டிக்கதக்கது. அவர்களை சமாதானம் செய்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். அதைவிட்டுவிட்டு விவசாயிகளை ஒடுக்கும் விதமாக, அவர்கள் மீது குண்டர் சட்டம் பதிவு செய்து, அதை திரும்ப பெறுவது, சட்டத்தை தவறாக பயன்படுத்துவதையே பார்க்க முடிகிறது.

தமிழ் மண்ணான புதுச்சேரியில்பாஜகஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. எங்களுடைய சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர்கள், எம்பிஇங்குஇருக்கின்றனர். ஆகவே தமிழ் மண்ணில் பாஜக ஆட்சியானது நடந்து கொண்டிருப்பதைத்தான் காட்டுகிறது. புதுச்சேரி அருகில் உள்ள தமிழகத்திலும் பாஜக ஆட்சி வருவதற்கு நீண்ட நாட்கள் ஆகாது.

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய பழங்குடியினத் தலைவர் பிர்சா முண்டாவை கவுரவப்படுத்தும் வகையில்தான் பழங்குடியினருக்கான கவுரவ நிகழ்ச்சிகளை பிரதமர் நடத்தியுள்ளார். புதுச்சேரியில் விழாவுக்கு வந்த பெரும்பாலான பழங்குடியின மக்கள் நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர். இடமில்லாதவர்கள் தரையில் அமர்ந்திருந்ததை சர்ச்சையாக்கியது அவசியமற்றது. பழங்குடியின மக்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

புதுச்சேரி மாநிலத்தில் என்னுடைய துறையான மீன்வளத் துறை மூலம் ரூ.100 கோடி கொடுக்கப்பட்டுள்ளது. சிறப்பு நிதியாக மத்திய அரசு ரூ.1400 கோடி வழங்கியுள்ளது. பெஸ்ட் புதுச்சேரி, ஸ்மார்ட் சிட்டி திட்டம் நடந்து கொண்டிருக்கிறது.இப்படி பலத்திட்டங்களின் பணிகள் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. பல மாநிலங்களில் பயனாளிகளுக்கு நேரடியாக திட்டங்களுக்கான பணம் வங்கிகளில் செலுத்தப்படுகிறது.

இன்றைக்கு பல மாநிலங்களில் ரேஷன் உள்ளிட்ட பல திட்டங்களுக்கான பணம் நேரடியாக அவரவர் வங்கியில் செலுத்தப்படுகிறது. நாடு முழுதும் ஆண்டுக்கு 8 கோடி விவசாயிகளுக்கு தலா ரூ.6 ஆயிரம் வழங்கப்படுகிறது.எனக்கு பிரதமர் ஆகும் ஆசை எதுவும் கிடையாது. பிரதமர் மோடி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் 400-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெற்று மூன்றாவது முறையாக அவர் ஹாட்ரிக் வெற்றி பெறுவார்.

தற்போது நடைபெறும் 5 மாநில சட்டப்பேரவை தேர்தலில் பாஜக தான் ஆட்சி அமைக்கும். புதுச்சேரியில் மக்களவைத் தேர்தலில் புதுச்சேரியைச் சேர்ந்தவரே பாஜக வேட்பாளராக போட்டியிடுவார். தேர்தல் பணிகள் தொடங்கப்பட்டு, வாக்குச்சாவடி வாரியாக பாஜகவை பலப்படுத்தி வருகிறோம். மணிப்பூர் பிரச்சினை நாடாளுமன்றங்களில் பேசப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. ஆகவே பிரதமர் அங்கு செல்லாதது குறித்த விவாதம் தேவையற்றது” என்றார்.



▶ உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற வேண்டி புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் நக்கீரர் சிலையிடம் அப்பகுதி இளைஞர்கள் நேற்று வேண்டுதலில் ஈடுபட்டனர்.

# இன்று

19-11-2023







சக வருடம் 1945 கார்த்திக 28

சுக்கு தோல் நீக்கி நீரில் சுண்ட காய்ச்சி பால் சர்க்கரை சேர்த்து பருகினால் மூக்கடைப்பு நீங்கும்

| சோபகிருது கார்த்திகை 3 | NOV - SUN ஞாயிறு | ஜமா.அத்துல் அவ்வல் 5 வளர்பிறை 323 / 042 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். ஷஷ்டி 04.33 (கா. 08.04) ஸப்தமி 54.37 (கா. 04.06) திருவோணம் 44.11 (மா. 11.55) சேஷம் 01.20 தியாஜ் 53.30 அகஸ் 28.52 அமிர்த 44.11 மேல் மரண. சுபமுகூர்த்தம். திருவோண விரதம். அமாகம். குமாரவயலூர் முருகப் பெருமான் திருக்கல்யாணம். சிறிய நகக.

| நல்லநேரம் | கௌரி.நல்ல.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 8.30-9.00 | 10.45-11.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை: 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; விருச்சிக லக்னம் இருப்பு நா. 4 வி. 54; சந்திராஷ்டமம் திருவாதிரை புனர்பூசம்; கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 6.15

ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்

இராசிபலன்: மேஷம் - நன்மை; ரிஷபம் - வெற்றி; மிதுனம் - எதிர்ப்பு; கடகம் - சுகம்; சிம்மம் - மகிழ்ச்சி; கன்னி - பாராட்டு; துலாம் - மேன்மை; விருச்சி - ஆர்வம்; தனுசு - இன்பம்; மகரம் - ஏமாற்றம்; கும்பம் - நன்மை; மீனம் - முயற்சி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அரியலூரில் கூட்டுறவு துறை சார்பில் பெட்ரோல் விற்பனை நிலையம் போக்குவரத்துத் துறை அமைச்சர் திறந்து வைத்தார்

அரியலூர்,நவ.19–

அரியலூரில் கூட்டுறவுத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் விற்பனை நிலையத்தை போக்குவரத்து துறை அமைச்சர்சா.சி. சிவசங்கர் திறந்து வைத்தார்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி, ராஜாஜி நகரில், அரியலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சார்பாக அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் விற்பனை நிலையத்தை (இந்தியன் ஆயில் கார்ப்பரேசன்), போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரிஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ம.தீபாசங்கரி வரவேற்றார், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், பொது மேலாளர் திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் முத்துமாரி, வருவாய் கோட்டாட்சியர் (அரியலூர்) ராமகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் செயல் ஆட்சியர் பழனியப்பன் துணைப்பதிவாளர் அறப்பளி, மற்றும் பல்வேறு துறைகளின் அதிகாரிகள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள், இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அலுவலர்கள், கூட்டுறவு சங்களின் பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முடிவில் அரியலூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க செயலாளர் எம். சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

# ராஜஸ்தான் தேர்தலிலும் பாஜகவின் இந்துத்துவா அரசியல் 3 துறவிகள் போட்டி: முஸ்லிம்களுக்கு வாய்ப்பு மறுப்பு

புதுடெல்லி , நவ.19–

ராஜஸ்தான் சட்டப்பேரவை தேர்தலில் 3 மடங்களின் துறவிகள் பாஜக சார்பில் போட்டியிடுகின்றனர். இத்துடன், ஒரு முஸ்லிம் வேட்பாளருக்கும் வாய்ப்பளிக்காததால் அக்கட்சி, 'இந்துத்துவா அரசியல்' செய்வதாகக் கருதப்படுகிறது. இந்துத்துவா கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கட்சியாகவுள்ள பாஜக தமது கொள்கையை ராஜஸ்தானின் சட்டப்பேரவைத் தேர்தலிலும் கடைப்பிடிக்கிறது.



ராஜஸ்தானில் மடத்தின் தலைவர்களான மூன்று துறவிகளுக்கு போட்டியிட பாஜக வாய்ப்பளித்துள்ளது. இதன் பின்னணியில் அம்மடத் துறவிகளின் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆதரவும் தமக்கு கிடைக்கும் என்ற பாஜகவின் நம்பிக்கை காரணமாகிவிட்டது. ராஜஸ்தானின் திஜாரா மடத்தின் பாலக்நாத், அழ்வரில் போட்டியிடுகிறார். பிரபல ஹவா மெஹல் மடத்தின் ஆச்சார்யா பால்முகுந்த், ஜெய்பூரில் போட்டியிடுகிறார். போக்ரான் மடத்தின் பிரதாப்புரி அதே தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்த மூன்று துறவிகளுமே அதிக சொத்துகள் கொண்ட செல்வசெழிப்பான மடங்களின் துறவிகள். இவர்களுக்கு அன்றாடம் பக்தர்கள் மூலம் காணிக்கையாக நிதி குவிகின்றது. இந்த மூன்று துறவிகளில் பாலக்நாத்தை எதிர்த்து திஜாரா தொகுதியில் காங்கிரஸ் முஸ்லிமான இம்ரான் கானுக்கு வாய்ப்பளித்துள்ளது. இவர் உ.பி.யின் முன்னாள் முதல்வர் மாயாவதியின் பகுஜன் சமாஜில் இருந்து காங்கிரஸுக்கு வந்தவர்.

ஜெய்சல்மேர் மாவட்டத்தின் போக்ரானில் போட்டியிடும் பாலக்நாத்தை எதிர்த்து காங்கிரஸின் மாநில அமைச்சரான சாலே முகம்மது போட்டியிடுகிறார். 2018 தேர்தலிலும் பாஜகவில் போட்டியிட்ட துறவி பாலக்நாத்தை எதிர்த்த இந்த முகம்மது வெற்றி பெற்றிருந்தார். ஜெய்ப்பூரில் போட்டியிடும் துறவி பால்முகுந்த் தனது பரபரப்பான பேச்சுக்களுக்கு பெயர் போனவர்.

கடந்த முறை பால்முகுந்தை வென்ற தன் கேபினேட் அமைச்சரான மஹேஷ் ஜோஷிக்கு பதிலாக கே.கே.திவாரிக்கு காங்கிரஸ் வாய்ப்பளித்துள்ளது. இந்த மூன்று துறவிகளில் பாலக்நாத் தவிர மற்ற இருவரின் தொகுதிகளில் பாஜக அதிருப்தியாளர்களும் போட்டியில் உள்ளனர். ராஜஸ்தானின் பாஜக ஒரே முஸ்லிம் தலைவராக யூனுஸ்கான் இருந்தார். இந்த ஒரு முஸ்லிம் பிரமுகருக்கும் இந்த முறை பாஜக வாய்ப்பளிக்கவில்லை. இதனால், யூனுஸ்கான் சுயேச்சையாக போட்டியிடுகிறார். இதன்மூலம், முஸ்லிம்களுக்கும் பாஜகவில் இனி போட்டியிட வாய்ப்பளிக்கப்படும் என்ற கருத்து தவறானதாகிவிட்டது.

காங்கிரஸில் 15 முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கு ராஜஸ்தானில் சுமார் 10 சதவிகித முஸ்லிம்கள் இருப்பதுதான் காரணம். இதுபோல், துறவிகளின் போட்டி பாஜகவில் துவக்கம் முதல் இருந்து வருகிறது. உத்தரப் பிரதேசத்தின் முதல்வராக இருக்கும் யோகி ஆதித்யநாத்தும் ஒரு துறவியே. உபி முதல்வர் யோகியை போல், மேலும் பல துறவிகள் பாஜகவில் முன்னாள் எம்பிக்களாகவும் தற்போதைய எம்பிக்களாகவும் உள்ளனர் என்பது நினைவுகூரத்தக்கது.






சுதந்திர போராட்ட தியாகி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி_சிதம்பரம்பிள்ளை 86வது நினைவுநாளை முன்னிட்டு நேதாஜி சுபாஷ் சேனை நிறுவனத் தலைவர் மகாராஜன் ஆணைக்கிங்க மாநில செயலாளர் _சுமன்தேவர் தலைமையில் மதுரை மாவட்டப் பொருளாளர் களஞ்சியம்_முருகன் மற்றும் நிர்வாகிகள் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், உடன் மருது தேசிய கழகத்தின் தலைவர் பா.மருதுபாண்டியன் கலந்து கொண்டார்.

# பணகுடியில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளைக்கு நினைவஞ்சலி

தென்காசி,நவ.19–

திருநெல்வேலி மாவட்டம்– பணகுடியில் தியாகச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் 87–வது நினைவு நாளையோட்டி பணகுடி பேருந்து நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டவ.உ.சி. யின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். தலைமை முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மு.சங்கர், முன்னிலை பரமசிவன் பிள்ளை, மேலும் இந்நிகழ்ச்சியில் சைவ வேளாளர் சங்கமும் முதலியார் சங்கமும் இணைந்து பிள்ளைமார் சங்கத்திற்கு ஃப்ரீசர் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் மருத்துவ முகாம், ஏழை எளிய மாணவர்களுக்கு இலவச கல்வி, தொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல், ஏழை தாய்மார்களுக்கு இலவச அரிசிப்பை வழங்கும் நிகழ்ச்சி 56– வது தேசிய நூலக வார விழாவில் பள்ளி மாணவர்களுக்குவினாடி, வினா நிகழ்ச்சி தளிர் வாசகர் வட்டம் சார்பாக பரிசளிப்பு விழா, தளிர் வாசகர் வட்டம், பாரத பண்பாட்டு கழகம், நண்பர்கள் ரத்ததான அறக்கட்டளை இணைந்து பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியவர் ஆரோக்கிய ராஜேஷ் மேலும் எம். ராதாகிருஷ்ணன், க.மீனாட்சிசுந்தரம், எஸ். கோலப்பன், பி. பிரம்ம நாயகம், கே. ஜி. பி பரமசிவம், எஸ். காந்தி, வெங்கடேசன், சேவா ரத்னா சிதம்பர குமார், பசுமை நாயகன் சித்திரை, டி கலைமணி, மு. க. மாணிக்கம், பி. எஸ். ரகுராம், போடி ரவி பிள்ளை, ஜி. மகேஷ் குமார், எஸ். உலகம்மாள், ராசுகுட்டி என்ற சுந்தர்ராஜன், எஸ். சக்திவேல், பி.சுதா லட்சுமி, எழுத்தாளர் ஆ. வந்தியதேவன், சி. அந்தோணிசாமி பி. முத்துக்குமார், ஜெயினுலாதீன், டி. சிங்கம், டி. விஜய்குமார், எம், மணி பாஸ்கராபுரம் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் மருத்துவ முகாமில் 500–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### மதுரை மாவட்டம் பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த மகளிர்

# அவ்வையார் விருது பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சியர் சங்கிதா தகவல்

மதுரை, நவ.19–

2024–ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தின விழாவில் பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவைபுரிந்தமகளிருக்குதமிழக முதலமைச்சர் அவர்களால் அவ்வையார் விருதுவழங்கப்பட உள்ளது. இவ்விருதிற்கு 8 கிராம் (22காரட்) எடையுள்ள தங்கப்பதக்கம், ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலை, பாராட்டுச்சான்றிதழ் மற்றும் சால்வை வழங்கப்படும்.

கீழ்க்காணும் தகுதிகளையுடைய சமூக சேவை புரிந்த பெண்கள் 25.11.2023–ஆம் தேதிக்குள் தமிழக அரசின் விருதுகள் (https://awards.tn.gov.in) என்ற இணையதள முகவரியில் உரிய ஆவணங்களுடன் பதிவு செய்து விண்ணப்பித்து, கையேடாக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தலா 3 நகல்கள் தயார் செய்து மதுரை மாவட்ட சமூக நல அலுவலகத்தில் கருத்துருக்களை வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தகுதிகள்:– தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும், குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகள், பெண்குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கை, சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்து விளங்கும் மகளிராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சமூக சேவைகளைத்தவிர்த்து வேறு சமூக சேவைகள் இவ்விருதிற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அரசு அலுவலர் இவ்விருதிற்குதகுதியுடையவர் இல்லை என்று மாவட்ட ஆட்சியர் சங்கீதா தெரிவித்துள்ளார்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் புதுக்குடி ஊராட்சி கண்மணியாபுரம் புதிய அங்கன்வாடி கட்டிடத்தினை கடையநல்லூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சுப்பம்மாள் பால்ராஜ், தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் திமுக மாவட்டச் செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லதுரை தலைமையில் புதுக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் கஸ்தூரி இன்பராஜ் முன்னிலையில் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துப்பாண்டியன், மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி, கடையநல்லூர் ஒன்றியச் செயலாளர் சுரேஷ், கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் ஹபிபூர் ரகுமான், ஒன்றிய துணை சேர்மன் ஐவேந்திரன்தினேஷ், மாவட்ட திட்ட குழு உறுப்பினர் ரா.முருகன், நகர் மன்ற உறுப்பினர் முகைதீன் கனி, திவான் மைதீன், ஊராட்சி செயலர் முருகேசன், கிளைக் கழகச் செயலாளர் வேல்முருகன், பாஸ்கர், ஜேம்ஸ் கனகராஜ், ராஜேஷ் மற்றும் ஊர் பொதுமக்கள் திமுக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# "பிஆர்எஸ் ஊழல் கட்சி, காங்கிரஸ் '4ஜி' கட்சி" வாரிசு அரசியலை முன்வைத்து அமித் ஷா சாடல்

புதுடெல்லி , நவ.19–

தெலங்கானா சட்டப்பேரவைக்கு வரும் 30–ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில், காங்கிரஸ் கட்சியை ஒரு '4ஜி கட்சி' என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா விமர்சனம் செய்துள்ளார்.



தெலங்கானாவின் கட்வாலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, "பிஆர்எஸ் கட்சி என்றாலே ஊழல்தான். இந்தக் கட்சி மிஷன் பகீரதா ஊழலை செய்தது. மியாபூர் நில ஊழலை செய்தது. காளேஸ்வரம் திட்டத்தில் பிஆர்எஸ் கட்சி லஞ்சம் பெற்றது. மதுபான ஊழலையும் பிஆர்எஸ் கட்சி செய்திருக்கிறது. காங்கிரஸும், பிஆர்எஸ் கட்சியும் வாரிசு அரசியல் கட்சிகள் (dynastic parties). கேசிஆர் தனது மகனை முதல்வராக்க விரும்புகிறார், சோனியா காந்தி ராகுல் காந்தியை பிரதமராக்க விரும்புகிறார். காங்கிரஸ், பிஆர்எஸ் ஆகிய கட்சிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எதிரான கட்சிகள்.

கேசிஆரின் அலட்சியதுக்கு எதிரான பிரதமர் மோடியின் நல்லாட்சிதான் இந்தத் தேர்தல். இந்த அரசாங்கம் பொய்யான வாக்குறுதிகளை அளிப்பதில் உலக சாதனை படைத்துள்ளது. பிஆர்எஸ் (VRS) கட்சிக்கு விஆர்எஸ் கொடுக்க வேண்டிய நேரம் இது. இங்கு பாஜக ஆட்சி அமைத்தால், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரை முதல்வராக தேர்ந்தெடுக்க பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்துள்ளார்.

ஏஐஎம்ஐஎம், பிஆர்எஸ், காங்கிரஸ் ஆகிய கட்சிகள் 2ஜி, 3ஜி மற்றும் 4ஜி கட்சிகள். காங்கிரஸ் ஒரு 4ஜி கட்சி. முதலில் ஜவஹர்லால் நேரு அதன் பிறகு இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, தற்போது ராகுல் காந்தி. தெலங்கானாவை 2ஜி, 3ஜி, 4ஜி கட்சிகளிடமிருந்து விடுவித்து, நரேந்திர மோடிக்கு வாய்ப்பு கொடுங்கள் என்று அனைவருக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்தத் தேர்தலில் பாஜக வெற்றி பெற்றால், மாநிலத்தில் மத அடிப்படையிலான இடஒதுக்கீடு (religion-based reservation) அழிக்கப்படும். அதோடு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓபிசி) மற்றும் பழங்குடியினர் (எஸ்டி) இட ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்" என்றார்.

தெலங்கானா சட்டப்பேரவைக்கு வரும் 30–ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. தெலங்கானாவில் ஆளும் பிஆர்எஸ், காங்கிரஸ் மற்றும் பாஜக ஆகிய கட்சிகளிடையே கடும் போட்டி நிலவுவது குறிப்பிடத்தக்கது.


# வள்ளிமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஏக தின அர்ச்சனை

*வேலூர் நவ 19.*

*வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்துள்ள வள்ளிமலையில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் கந்த சஷ்டியையொட்டி ஏக தின இலட்சார்ச்சனை நடைபெற்றது. காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை கந்தசஷ்டி ஏகதின இலட்சார்ச்சனை நடைபெற்றது.*



*இதனை தொடர்ந்து இன்று மாலை 6.00 மணிக்கு சுப்பிரமணிய சுவாமி தெய்வானை திருக்கல்யாணம் விமரிசையாக நடைபெறவுள்ளது. விழாவிற்கான ஏற்பாடுகளை திருக்கோயில் செயல் அலுவலர் திருநாவுக்கரசு , மேலாளர் ராஜ்குமார் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர். விழாவை ஒட்டி போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.*




காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு கொம்யூனுக்கு உட்பட்ட தென்பிடாகை கிராமத்தில் உள்ள வயல்வெளிகளில் உள்ள நீர் வடியாத காரணத்தால் அப்பகுதியில் உள்ள மக்கள் மற்றும் விவசாயிகள் தேங்கிய நீரை அகற்ற கோரிக்கை வைத்த நிலையில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று காலை அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டார். அங்கு அமைந்துள்ள இரண்டு கல்வெட்டுகளில் அகலம் குறைவாக இருந்ததன் காரணத்தால் நீர் வடியாமல் இருந்ததை கண்டு உடனடியாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சந்திரசேகரிடம் இந்த கல்வெட்டுகளின் சைசை பெரியதாக்கி தேங்கியுள்ள நீரை அகற்றும்படி ஆட்சியர் உத்தரவு பிறப்பித்தார். மேலும் செல்லூர் பகுதியில் உள்ள வாய்க்கால்களில் அடைப்பு இருந்த காரணத்தால் நீர் வடியாமல் தேங்கியிருந்ததை பார்வையிட்டு உடனடியாக இயந்திரத்தை பயன்படுத்தி இப்பணியை செய்து முடிக்குமாறும் கூறினார். இந்நிகழ்வில் நிர்வாக பொறியாளர் மகேஷ் மற்றும் விவசாயிகள் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

# காங்கிரசின் பரப்புரைக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக நடிகை விஜயசாந்தி நியமனம்

ஹைதராபாத்,நவ.19–

காங்கிரசின் பரப்புரைக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக நடிகை விஜயசாந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.



தெலுங்கு, தமிழ் உள்ளிட்ட பல படங்களில் லேடி சூப்பர் ஸ்டாராக வலம் வந்தவர் நடிகை விஜயசாந்தி. இவர் சினிமா துறைக்கு பிறகு அரசியலில் களம் இறங்கி காங்கிரஸ், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, பாஜகவில் இணைந்து அரசியலில் ஈடுபட்டு வந்தார். எம்பி ஆகவும் இருந்த விஜயசாந்தி கடைசியாக பாஜகவில் தொடர்ந்து இருந்து வந்தார்.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கட்சிப் பணியில் இருந்து ஆர்வம் காட்டாமல் இருந்த விஜயசாந்தி தெலுங்கானாவில் 30ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இதில் போட்டியிடுவதற்காக விஜயசாந்தி பாஜகவில் போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்தார், ஆனால் அவருக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கவில்லை, மேலும் நட்சத்திர பேச்சாளருக்கு அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவ்வாறு வெளியிடப்படவில்லை. இதனால் பாஜக மீது அதிருப்தியில் இருந்த விஜயசாந்திகாங்கிரஸ்கட்சியின் தேசியதலைவர் மல்லிகார்ஜுன கார்கே முன்னிலையில் கட்சியில் இணைந்தார். இந்நிலையில் பாஜகவில் இருந்து விலகி காங்கிரஸ் கட்சியில் நேற்று இணைந்த நடிகை விஜயசாந்தி, தெலங்கானா மாநில பரப்புரைக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# காரைக்காலில் வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் தேர்தல் சிறப்பு முகாம் பற்றிய விழிப்புணர்வு முகாம்






காரைக்கால்,நவ,19
காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரியும் மற்றும் மாவட்ட ஆட்சியருமான குலோத்துங்கன் அறிவுறுத்தலின் பேரில் செருமா விலங்கையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரியில் மாணவ மாணவிகளுக்கு இடையே புதிய வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் தேர்தல் சிறப்பு முகாம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை இக்கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் மணிகண்டன் துவக்கி வைத்தார். 01.01.2024 அன்று 18 வயது முடிவடைந்த அனைவரும் வாக்காளர் அடையாள அட்டையை பெற தகுதி உள்ளவர்கள் என்றும், காரைக்கால் மாவட்டத்தில் 25 & 26 .11.2024 சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இரண்டாவது சிறப்பு முகாமானது அருகில் உள்ள அனைத்து வாக்கு சாவடிகளில் நடைபெறும் என்றும், இதனை மாணவர்களும், பெற்றோர்களும் தங்கள் உறவினர்களும் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்த சிறப்பு முகாம்களில் புதியதாக பெயர் சேர்த்தல், முகவரி மாற்றம் பெயர் திருத்தம் இருந்தால் அதனை அங்கு உள்ள தேர்தல் அதிகாரிகளிடம் திருத்தம் செய்து கொள்ளலாம் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும் மாணவர்களுக்கான புதிதாக வாக்காளர் அட்டையை ஆன்லைன் மூலம் படிவம்-6 பதிவு செய்வது எப்படி என்று நேரடியாக அனைத்து மாணவ மாணவிகளுக்கும் விளக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் முனைவர் ஷெர்லி மற்றும் முனைவர் கனகவேல் ஆகியோர் இது சம்பந்தமாக மாணவர்களிடம் உரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஸ்வீப் ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் செய்திருந்தார்.



▶ வடசென்னையில் புதிதாக பல்வேறு சிறப்பு மருத்துவ உபகரணங்களுடன், அவசர சிகிச்சை பிரிவு மற்றும் இதயம் நோய், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை அரங்கம், ஒரு அதிநவீன ஹெல்த்கேர் வசதி என பல்வேறு சிறப்பம்சம் நிறைந்த மருத்துவமனையாக சென்னை புளியந்தோப்பு பகுதியில் "ப்ரைட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை திறப்பு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவமனையை திறந்து வைத்தனர். மேலும் இந்நிகழ்வில் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



▶ காரைக்கால் மாவட்டம் திருமலைராயன் பட்டிடத்தில் மாரியம்மன் கோயில் தெருவில் இயங்கி வரும் 78 மாணவர்கள் பயிலும் ஜி.பி.எஸ் அரசு பள்ளியை நேற்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் ஆய்வு மேற்கொண்டார். மாணவர்களிடம் கலந்துரையாடிய சட்டமன்ற உறுப்பினர் ஆசிரியர்களிடம் பள்ளியின் வளர்ச்சி குறித்து கேட்டறிந்தார். மேலும் மழையால் சில இடங்களில் பழுது ஏற்பட்டு பொதுப்பணித்துறையால் பராமரிக்கப்படும் பணிகளை ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் விரைந்து பணிகளை முடித்து மாணவர்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.



▶ காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் சிறப்பான முயற்சியால் அரசு பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இலவச நீட் பயிற்சி வகுப்பினை சில வாரங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்த நிலையில் இலவச நீட் பயிற்சி வகுப்பிற்கு நிதி உதவும் வகையில் அப்துல் பாசித் தன்னுடைய சித்தப்பா ராவண்ணா ,அப்துல் ரவூப் பரிந்துரை செய்தார்கள். அப்துல்பாசித் ,தன் சித்தப்பா அப்துல் ரவூப் மாணவர்கள் நலன் கருதி சமூக நல ஆர்வத்துடன் மாவட்ட நிர்வாகம் எடுக்கும் முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் விதத்தில் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தலின் பேரில் ரூபாய் 2 இலட்சத்திற்கான நன்கொடையினை உரிய வங்கி கணக்குக்கு அனுப்பி வைத்தார். வங்கி கணக்கிற்கு அனுப்பிய ரசீதினை நேற்று காரைக்கால் மாவட்ட ஆட்சியரிடம் ராவண்ணா மற்றும் அப்துல் பாசித் சமர்ப்பித்தார்கள். மாவட்ட ஆட்சியர் அந்த ரசிதை பெற்றுக் கொண்டு ராவண்ணா மற்றும் அப்துல் பாசித் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

### ஆரணி ஆரம்ப சுகாதார நிலையத்தில்

# மருத்துவர், மருந்தாளுனர் இல்லாததால் நோயாளிகள் அவதிக்கு உள்ளாகின்றனர்





ஊத்துக்கோட்டை, நவ19-
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பஜார் வீதியில் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு நாள்தோறும் சுமார் 200 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில்,இந்த ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைக்கு இரண்டு மெடிக்கல் ஆபீஸர்,நான்கு நர்ஸ்,ஒரு மருந்தாளுநர் என்று பணியாற்றுபவர்கள் இருக்க வேண்டும்.ஆனால்,இந்த மருத்துவமனையில் ஒரு மெடிக்கல் ஆபீஸர்,ஒரு நர்ஸ் மட்டுமே பணியில் உள்ளனர். தற்காலிக நர்சு ஒருவரும் பணியாற்றி வருகிறார். இந்நிலையில்,பணியில் உள்ள மெடிக்கல் ஆபிஸர் விடுப்பில் சென்றுவிட்டாள் புறநோயாளிகள் சிகிச்சை பெறுவதில் சிக்கல் ஏற்படுகிறது.

மேலும்,இரவு, பகல் என இம்மருத்துவமணைக்கு வரும் நோயாளிகள் திண்டாட்டத்திற்கு உள்ளாகின்றனர்.இந்த மருத்துவமனையில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக மருந்தாளுநர் இல்லாததால் பணியில் உள்ள ஒரு நர்ஸ் நோயாளிகளுக்கு ஊசி போடுதல் மற்றும் மருந்து மாத்திரை வழங்குதல் என பலதரப்பட்ட பணிகளை செய்யவேண்டிய அவல நிலை நீடிக்கிறது.

இதனால் மருந்து மாத்திரை வாங்க வரும் நோயாளிகளும்,ஊசி போட்டுக் கொள்ள வரும் நோயாளிகளும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலை நீடித்து வருகிறது. சோழவரம் வட்டார அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைக்கு உட்பட்ட ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கடந்த பத்து ஆண்டுகளாக மருந்தாளுனர்கள் யாரும் பணி அமர்த்தப்படவில்லை என்பது வேதனைக்குரிய செய்தியாக கூறப்படுகிறது.

மேலும், இந்த மருத்துவமனை வளாகத்தில் பிரசவ அறை என்று தனி கட்டிடம் இல்லாததால் குழந்தை பெற்றுக்கொள்ளும் தாய்மார்களும், குழந்தைகளும் புற நோயாளிகள் சிகிச்சை பெற வந்து செல்லும் கட்டிடத்திலேயே தங்கி இருக்க வேண்டிய அவல நிலை நீடிக்கிறது.எனவே, சுகாதாரத்துறை அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் இம்மருத்துவமனையில் பற்றாக்குறையாக உள்ள காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும், புறநோயாளிகளின் பிரச்சனையை தீர்க்க வேண்டும்.பிரசவ கட்டிடம் கட்டித்தர வேண்டும்.என புற நோயாளிகளும்,சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் கந்த சஷ்டியை முன்னிட்டு சூரசம்கார நிகழ்ச்சி நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, நவ19-
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் ஆறு நாட்கள் திருவிழாவான கந்த சஷ்டி உற்சவம் நடைபெற்றது. இதை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கணபதி பூஜை,வாஸ்து சாந்தி உள்ளிட்டவை நடைபெற்றது.

திங்கட்கிழமை காலை கந்த சஷ்டி திருவிழாவின் துவக்க நிகழ்ச்சியாக கோவிலில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் பின்னர்,உற்சவர் முருகன், வள்ளி, தெய்வானையுடன் பிரகார புறப்பாடு நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை காலை-மாலை யாகசாலை பூஜைகள்,சுவாமி உள்புறப்பாடு உள்ளிட்டவை நடைபெற்றது. வியாழக்கிழமை சத்ருசம்ஹார அர்ச்சனை மற்றும் சுவாமி பிரகார புறப்பாடு நடைபெற்றது.நேற்று முன் தினம் மதியம் ஸ்ரீசண்முகர் அபிஷேகமும், மாலை ஸ்ரீ சண்முகர்வேல் வாங்குதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பின்னர், பரதநாட்டிய நிகழ்ச்சியும்,சுவாமி பிரகார புறப்பாடும் நடைபெற்றது.

நேற்று காலை யாகசாலை பூஜைகள்,கலச பூஜைகள்,மகா பூர்ணாகுதி,கலசபிஷேகம் உள்ளிட்டவை நடைபெற்றது. நேற்று மாலை மண்ணடி அருகே உள்ள வடக்கு தெருவில் சூரசம்கார நிகழ்ச்சி நடைபெற்றது.அப்பொழுது மனிதன்,ஆடு,சிம்மம்,யானை, யாழி உள்ளிட்ட ஆறு உருவங்களில் சூராபத்மன் உருவெடுத்து முருகனிடம் போரிடுகிறார்.முருகர் போரிட்டு சூரா பத்மனின் தலையை கொய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.பின்னர், மா மரத்தில் சூரபத்மன் தஞ்சம் அடைகிறார்.

எனவே, முருகர் மரத்தை பிளக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.பின்னர், சூரபத்மனின் வேண்டுதலை ஏற்று மயிலாகவும், சேவலாகவும் மாற்றி முருகர் தனது இரு பக்கங்களில் வைத்துக் கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர்,கொடி இறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இன்று காலை சிறப்பு அபிஷேகம், சந்தன காப்பு அலங்காரம்,மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெறுகிறது. மாலை சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவ நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்னர், பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட உற்சவர் மங்கள வாத்தியம் முழங்க திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நேற்று நடைபெற்ற சூரசம்கார நிகழ்ச்சியில் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமையில் ஊழியர்களும், பணியாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

### சென்னை புது வண்ணாரப்பேட்டை ஸ்ரீ ஐயப்பன் கோவிலில்

# 1000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் அதிகாலை முதலே மாலை அணிந்து விரதத்தை தொடங்கினர்



சென்னை, நவ,19-
புது வண்ணாரப்பேட்டை டோல்கேட் பேருந்து நிலையம் அருகே உள்ள வடசென்னை ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் செண்டை மேளம் முழங்க ஐயப்பனுக்கு சிறப்பு அபிஷேகம் பூஜைகள் செய்யப்பட்டன. வட சென்னைக்கு உட்பட்ட திருவொற்றியூர் புதுவண்ணாரப்பேட்டை இராயபுரம் எண்ணூர், உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஐயப்பா பக்தர்கள் ஐயப்பனை தரிசனம் செய்து பூஜைகள் செய்த பிறகு குருசாமி ராமச்சந்திரனிடம் கையில் ஐயப்ப பக்தர்கள் துளசி மாலை அணிவித்து தங்கள் விரதத்தை தொடங்கி உள்ளனர்.

48 நாட்கள் விரதம் இருந்து இருமுடி கட்டி சபரிமலை சென்று ஐயப்பனை தரிசனம் செய்து மகரஜோதியை கண்டு பின்பு விரதத்தை முடிப்பது வழக்கம் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு அதிகமான ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதத்தை கடைப்பிடிப்பதாக தெரிகிறது.

கார்த்திகை மாதம் முதல் நாள் அன்று முதல் ஜனவரி மாதம் 15 தேதி வரை தினமும் மாலை ஐயப்பனுக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த 60 நாட்களில் ஐயப்பனுக்கு சிறப்பு மலர் பூஜை செய்யப்பட்டு பஜனை பாடல் பாடி பூஜைகள் செய்யப்படுகின்றன.

கேரளாவில் உள்ள ஐயப்பன் கோவிலில் மண்டல மகர பூஜை முன்னிட்டு வடசென்னை ஐயப்பன் கோவிலில் இருந்து சுமார் 6000 ஐயப்ப பக்தர்கள் இருமுடி கட்டி சுமந்து கொண்டு செல்கின்றனர்

# சென்னையில் அரசு பேருந்தில் தவறி விழுந்த மாணவனின் கால்கள் அகற்றம்

குன்றத்தூர்,நவ,19
சென்னையில் அரசுப்பேருந்தில் இருந்து தவறி விழுந்த மாணவன் விபத்தில் சிக்கிய நிலையில், இரண்டு கால்களும் அகற்றம்/ குன்றத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவன் ஆபத்தான முறையில் பேருந்து படிக்கட்டில்தொங்கியபடி பயணம் படிக்கட்டில் தொங்கிய மாணவன் தவறி விழுந்தபோது, பேருந்தின் சக்கரம் ஏறியதில், இரு கால்களும் நசுங்கி கோரம்/கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் மாணவனின் நசுங்கிய கால்கள் இரண்டையும் மருத்துவர்கள் அறுவை சிகிச்சைமூலம் அகற்றினர்.

கால்களை இழந்த மாணவனை கண்டு பெற்றோர் கதறி அழுகை = தனது மகனுக்கு நேர்ந்தது போல் எந்தவொரு குழந்தைக்கும் நடக்கக் கூடாது என கண்ணீர்

# ரூ.1 முதல் ரூ.1,500 வரை – தஞ்சையில் தயாராகும் விதவிதமான மண் விளக்குகள் !



தஞ்சாவூர் , நவ.19-
தீபங்கள் பேசும்... இது கார்த்திகை மாதம்... மணிகள் போலவே அசைந்து ஆடுதே தீபமே என வீடுகளில் பெண்கள் உற்சாகமாக விளக்கேற்ற தஞ்சாவூரில் விதவிதமாக மண் விளக்குகளை தயாரிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அவ்வப்போது மழை பெய்து வருவதால் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்தனர். தஞ்சாவூர் கீழவாசல் பகுதிகளில் 50-க்கும்மேற்பட்டோர் மண்பாண்டத் தொழில் செய்து வருகின்றனர்.

வரும் 26-ம் தேதி கொண்டாடப்பட உள்ளகார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, இவர்கள் தற்போது அகல்விளக்கு, திருஷ்டி விளக்கு, அன்னகாமாட்சி விளக்கு, குத்து விளக்கு, நந்தி விளக்கு, சர விளக்கு என 20 வகையான விளக்குகளை தயாரித்து வருகின்றனர். இந்த விளக்குகள் ரூ.1 முதல் ரூ.1,500 வரை விற்கப்படுகின்றன. இந்நிலையில், தற்போது அவ்வப்போது மழைபெய்து வருவதால், தயாரிக்கப்படும் விளக்குகளை சூளையில் வைத்து சுடமுடியாமலும், வெயிலில் காய வைக்க முடியாமலும் தொழிலாளர்கள் தவித்து வருகின்றனர். கீழவாசல் பகுதியில் கார்த்திகை திருவிழாவுக்காக அகல் விளக்குகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட மண்பாண்டத் தொழிலாளர்.

இது குறித்து மண் விளக்குகள் தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள கண்ணன் கூறியது: ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை தீபத்தின்போது மழை பெய்வதால், மண் விளக்குகள் தயாரிக்கும் பணி பாதிக்கப்படுகிறது. இந்த ஆண்டும் தற்போது அவ்வப்போதுமழைபெய்து வருவதால், தயாரித்து வைக்கப்பட்டுள்ள விளக்குகளை சூளையில் வைத்து சுட்டு, வெயிலில் காய வைக்க முடியவில்லை. எங்களுக்கு தமிழகஅரசு வழங்கும் மழைக்கால நிவாரணத்தை ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி, அதை உரிய காலத்தில் வழங்கினால் எங்களது வாழ்வாதாரத்துக்கு பேருதவியாக இருக்கும்.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக வெளிமாநிலங்களிலிருந்து வரும்பீங்கான்விளக்குகள், மெழுகு விளக்குகள் போன்றவற்றால் பாரம்பரியமான மண் விளக்குகளுக்கு மவுசு குறைந்து, தொழிலும் பாதிக்கப்பட்டு வருகிறது. அத்துடன், மண்பாண்டத் தொழிலுக்கு தேவையான களிமண் கிடைப்பதிலும் சிக்கல் உள்ளது. எனவே, இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# ஆலங்குடியில் கந்தசஷ்டி விழா



ஆலங்குடி, நவ.19-
புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் உள்ள இரண்டாவது குருஸ்தலமான நாமபுரீஸ்வரர் திருக்கோவிலில் சிறுவர்களின் காவடி ஆட்டத்துடன் கந்த சஷ்டி விழா நடைபெற்றது.

கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற இரண்டாவது குருஸ்தலமாக விளங்கக் கூடிய ஸ்ரீ தர்மஸம்வர்த்தினி சமேத நாமபுரீஸ்வரர் திருக்கோவிலில் உள்ள வள்ளி தெய்வானை சமேத பாலசுப்பிரமணிய சுவாமிக்கு கந்த சஷ்டி விழா மிக விமர்சையாக நடைபெற்றது.

ஆலங்குடி சித்தி விநாயகர் கோவில் இருந்து 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆலங்குடி முக்கிய வீதி வழியாக சிறுவர்களின் காவடி ஆட்டத்துடன் தொடங்கி பின்னர் ஆலங்குடி நகரின் பல்வேறு பகுதிகளிலும், பொதுமக்கள் மற்றும் பெண்கள் முருக பக்தர்களுக்கு பாதங்களில் நீர் ஊற்றி பாதபூஜைகளில் ஈடுபட்டனர். பின்னர் ஆலங்குடி சிவன் கோவில் சென்றடைந்த முருக பக்தர்கள்.

முருகனுக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் 108 சங்கு அபிஷேகம் செய்து திரவியங்கள், மாவுப்பொடி அபிஷேகம், மஞ்சள் அபிஷேகம், நெய் அபிஷேகம், தேன் அபிஷேகம், இளநீர் அபிஷேகம், பால் அபிஷேகம், பழ அபிஷேகம், பன்னீர் அபிஷேகம் உள்ளிட்ட அபிஷேகங்கள் நடைபெற்றது.

மேலும் வள்ளி தெய்வானை சமேத பாலசுப்பிரமணியனுக்கு தீபாதாரணை காட்டி சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. இதில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு வழிபட்டு சென்றனர்.

# கந்தர்வகோட்டை ஒன்றிய இல்லம் தேடிக் கல்வி மையத்தில் முப்பெரும் விழா



கந்தரவகோட்டை, நவ.19-
புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் மோகனூர் இல்லம் தேடிக் கல்வி மையத்தில் குழந்தைகள் தினவிழா, குழந்தைகளுக்கு எதிரான வன்முறை தடுப்பு வாரம், இல்லம் தேடிக்கல்வி மையத்திற்கு தொடர்ச்சியாக வரக்கூடிய மாணவர்களுக்கு பாராட்டு என முப்பெரும் விழா நடைபெற்றது.

இந்நிகழ்வினை தன்னார்வலர்கள் பிரமா அனைவரையும் வரவேற்றார், இந்நிகழ்வில் கலந்து கொண்ட இல்லம்தேடி கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா பேசியதாவது, மோகனூர் இல்லம் தேடிக் கல்வி மையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மையம் சிறப்பாக பணியாற்றி வரும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும். குழந்தைகளுக்கு தக்க பாதுகாப்பு அளித்து அடுத்த தலைமுறையினரை நல்ல பாதையில் வழி நடத்திச் செல்ல வேண்டியது ஒவ்வொருவரின் மற்றும் சமூகத்தின் கடமையாகும் என்று பேசினார், மாணவ மாணவிகளின் சிறப்பாக நடைபெற்றது, இந்நிகழ்வில் தன்னார்வலர்கள் கார்த்திகா, காவியா, ரேகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மருத்துவக் கழிவுகள் கொட்டுவோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை: தமிழக அரசுக்கு ஐகோர்ட் பரிந்துரை

மதுரை, நவ. 19-

"தமிழகத்தில் மருத்துவக் கழிவுகளை கொட்டுவோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கும் வகையில் உரிய சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு இது சரியான தருணம்" என உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம்காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சார்பில் உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: சமீபத்தில் கேரளாவில் இருந்து லாரியில் மருத்துவக் கழிவுகள் கொண்டுவரப்பட்டு தமிழகத்தில் குருவன்கோட்டை கிராமத்தில் கொட்டினர். அந்த லாரியை பொதுமக்கள் சிறைபிடித்தனர். அந்த லாரியை போலீஸார் பறிமுதல் செய்து, வழக்கு பதிவு செய்தோம். இந்நிலையில், அந்த லாரியை உரிமையாளரிடம் ஒப்படைக்க ஆலங்குளம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. லாரியை விடுவித்தால் வழக்கின் விசாரணை பாதிக்கப்படும். எனவே, லாரியை விடுவிக்குமாறு ஆலங்குளம் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்தமனுநீதிபதிகே.கே. ராமகிருஷ்ணன் முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் செந்தில்குமார் வாதிடுகையில், விதிகளை மீறி கேரளாவில் இருந்து 75 கிலோ மீட்டர் தூரத்தில் தமிழக எல்லைக்கு வந்து மருத்துவக் கழிவுகளை கொட்டியுள்ளனர். அந்த லாரியை விடுவித்ததை அனுமதிக்கக் கூடாது என்றார்.

பின்னர் நீதிபதி, "தமிழகத்தில் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் நோக்கத்தில் கேரளாவில் இருந்து மருத்துவக் கழிவுகளை ஏற்றி வந்த லாரியை விடுவித்து கீழ் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மருத்துவக் கழிவுகளை கொட்டுபவர்கள் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அரசு ஆலோசனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மருத்துவ கழிவுகளை கொட்டுவதை தடுக்க தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது. மருத்துவக்கழிவுகளை கொட்டுபவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டதிருத்தம் கொண்டு வருவதற்கு இது சரியான நேரம்" என உத்தரவிட்டார்.

# சுரங்கப் பாதையில் சிக்கிய 40 பேரின் குடும்பத்தினருக்கு உதவிகள் உத்தராகண்ட் முதல்வர் அறிவிப்பு

டேராடூன், நவ. 19-

உத்தராகண்ட்டில் சுரங்கப் பாதையில் சிக்கியவர்களின் குடும்பத்தினருக்கு தங்கும் இடம், உணவு, மருத்துவ வசதிகளை மாநில அரசு வழங்கும் என்று முதல்வர் புஷ்கர் சிங் தாமி அறிவித்துள்ளார்.



உத்தராகண்டில் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக உத்தரகாசி, யமுனோத்ரியை இணைக்கும் வகையில் சில்க்யாரா வளைவு - பர்காட் இடையே 4.5 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த 12-ம் தேதி அதிகாலை 4 மணி அளவில் 60 மீட்டர் தொலைவு சுரங்கப் பாதையில் மண் சரிந்தது. இருபுறமும் மணல் மூடிய நிலையில் சுரங்கப் பாதைக்குள் 40 தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். பல்வேறு துறைகளைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட நிபுணர்கள் இரவு பகலாக 7 நாட்களாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மீட்புநடவடிக்கையில் உரிய முன்னேற்றம் ஏற்படாத நிலையில், சுரங்கப் பாதையில் சிக்கியவர்களின் குடும்பத்தினருக்கு தங்கும் இடம், உணவு, மருத்துவ வசதிகளை மாநில அரசு வழங்கும் என்று முதல்வர் புஷ்கர் சிங் தாமி அறிவித்துள்ளார். இது தொடர்பாக முதல்வர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "மீட்புப் பணிகள் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறார். மீட்புப் பணி நடவடிக்கைகள் குறித்து அவருக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

மீட்புப் பணியில் ஈடுபட்டு வருபவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கி வருகிறது. மீட்பு நடவடிக்கையில் உள்ள தடைகளை அகற்ற தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருகிறது. சுரங்கப் பாதையில் சிக்கியவர்களின் குடும்பத்தினருக்கு சின்யாலிசோர் மற்றும் அதைச் சுற்றிய பகுதியில் தங்கும் இடம் வழங்கவும், அதோடு, அவர்களுக்கு உணவு, மருத்துவ வசதிகளை வழங்கவும் கார்வால் ஆணையருக்கு முதல்வர் புஷ்கர் சிங் தாமி உத்தரவிட்டுள்ளார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "பெண்களின் நம்பிக்கையை ராஜஸ்தான் காங். அரசு சிதைத்துவிட்டது"

## பிரதமர் மோடி கடும் விமர்சனம்



ஜெய்ப்பூர், நவ. 19-

"ராஜஸ்தான் காங்கிரஸ் அரசு, பெண்களின் நம்பிக்கையைச் சிதைத்துவிட்டது" என்று பிரதமர் மோடி கடுமையாக விமர்சித்துள்ளார். ராஜஸ்தான் மாநிலம் பாரத்பூரில் நேற்று நடந்த தேர்தல் பிரச்சாரப் பேரணிக் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசும்போது, "ராஜஸ்தான் மக்கள் ஒரு மந்திரவாதிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டார்கள். தேர்தலுக்கு பின்னர் காங்கிரஸ் முற்றிலுமாக வெளியேற்றப்படும். டிசம்பர் 3-ம் தேதி காங்கிரஸுக்கு சூ மந்திரம் நடக்கும். அரசியலுக்கு வருவதற்கு முன்பாக ஒரு தொழில்முறை மந்திரவாதியின் (மேஜிஷியன்) மகனான அசோக் கெலாட், நாடு முழுவதும் சுற்றிக்கொண்டு மேஜிக் நிகழ்ச்சிகள் நடத்தினார்.

ஒருபுறம் இந்தியா உலக அளவில் முன்னணியில் வளர்ந்து வருகிறது. மற்றொருபுறம் கடந்த ஐந்து ஆண்டுகளில் ராஜஸ்தானில் என்ன நடந்தது என்பது உங்களுக்கே தெரியும். காங்கிரஸ் அரசு ராஜஸ்தான் மாநிலத்தை ஊழல்,கலவரங்கள் மற்றும் குற்றங்களில் முதலிடம் பிடிக்க வைத்துள்ளது. அதனால்தான் ராஜஸ்தான் மக்கள் 'மந்திரவாதிஜி உங்களுக்கு எந்த ஒரு ஓட்டும் கிடைக்காது' என்று சொல்கிறார்கள்.

எங்கெல்லாம் காங்கிரஸ் ஆட்சிக்கு வருகிறதோ, அங்கெல்லாம் தீவிரவாதிகள், குற்றவாளிகள் மற்றும் கலவரக்காரர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். காங்கிரஸின் கொள்கையே திருப்திப்படுத்துவதுதான். அது உங்கள் உயிரை பணயம் வைப்பதாக இருந்தாலும்சரி. காங்கிரஸ் தலைமையிலான இந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் ராஜஸ்தானில் பெண்கள், தலித்துகளுக்கு எதிராக அதிகமான குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ேஹாலி பண்டிகையோ, ராம நவமியோ, ஹனுமன் ஜெயந்தியோ எதையும் நீங்கள் அமைதியாக கொண்டாட முடியவில்லை. அவற்றில் கலவரம், கல்வீச்சு, ஊரடங்கு போன்றவை ராஜஸ்தானில் தொடர்கதையாகிப் போனது. ராஜஸ்தான் பெண்களின் மன உறுதியை காங்கிரஸ் கட்சி சிதைத்துவிட்டது" என்று பிரதமர் மோடி பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர், "பெண்கள் போலியாக பாலியல் வன்கொடுமை புகார் அளிப்பதாக முதல்வர் கூறியுள்ளார். அவரால், பெண்களைப் பாதுகாக்க முடியாதா? அப்படி பாதுகாக்க முடியாத முதல்வர் ஒரு நிமிடம் கூட பதவியில் இருக்கலாமா?" என்று கேள்வி எழுப்பினார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 200 தொகுதிகளுக்கு வரும் 25-ம் தேதி தேர்தல் நடைபெற இருக்கிறது. இதில் பதிவாகும் வாக்குகள் டிசம்பர் 3-ம் தேதி எண்ணப்பட உள்ளன. கடந்த 2018-ல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 99 இடங்களில் வெற்றி பெற்றது. பாஜக 73 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சுயேட்சைகளின் ஆதரவுடன் காங்கிரஸ் கட்சிகடந்த5ஆண்டுகளாக ஆட்சி செய்தது குறிப்பிடத்தக்கது.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 87-வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## நிறைவேற்றம்... முதல் பக்க தொடர்ச்சி

இதற்கு முந்தைய சில நிகழ்வுகளில் அவர் எழுப்பிய சில வினாக்களுக்கு முறையாக எழுத்து மூலமாகவும், சம்மந்தப்பட்ட அரசு செயலர்கள், தலைமைச் செயலாளர் ஆகியோர் நேரிலும் விளக்கம் அளித்துள்ளனர்.

எந்த ஒரு நிகழ்விலும் அவர் கோரிய விளக்கங்கள் அவருக்கு வழங்கப்படாமல் இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட சில சட்டமுன்வடிவுகளுக்கு அனுமதி வழங்காமல் திருப்பி அனுப்பி வைத்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களையும், இந்தச் சட்டமன்றத்தையும் ஆளுநர் அவமதிக்கின்றார் என்றுதான் பொருளாகும். 10 சட்ட முன்வடிவுகள் உள்ளிட்ட 12 சட்ட முன்வடிவுகள் மற்றும் வேறு சில கோப்புகளுக்கும் இவர் ஒப்புதல் வழங்காமல் இருப்பது சட்டவிரோதம் ஆகும். ஜனநாயக விரோதம் ஆகும். மக்கள் விரோதம் ஆகும். மனச்சாட்சி விரோதம் ஆகும். அனைத்திற்கும் மேலாக இந்த சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானதாகும்.

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக இருப்பவர், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டும்; தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒன்றிய அரசிடம் அவருக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டுக்கான நிதியை வாங்கித் தருவதற்கு முயற்சிக்கலாம்; ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையைப் பெற்றுத்தரலாம்; எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு உரிய நிதியை வாங்கித் தரலாம்; புதிய ரயில்வே திட்டங்களைப் பெற்றுத் தரலாம்; மாநில ஆட்சிக்கும், ஒன்றிய அரசுக்கும் பாலமாக இருக்கலாம். ஆனால், இதில் எதையும் செய்யாமல், மாநில அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு முட்டுக்கட்டை போடலாம் என நாள்தோறும் யோசித்து யோசித்து செயல்பட்டு வருகிறார்.

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில், ஆளுநர்களின் மூலமாக குடைச்சல் கொடுத்து வருகிறார்கள். இப்போது உச்ச நீதிமன்றம் தலையில் ஓங்கி குட்டு வைத்தவுடன் அவசர அவரமாக கோப்புகளைத் திருப்பி அனுப்புவதும், சில கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதும் என நாடகம் ஆடுகின்றார் ஆளுநர். அவருக்கு தெரிந்ததை அவர் செய்கிறார். செய்துவிட்டுப் போகட்டும். ஆனால் நாம் எப்போதும் சட்டத்தின் வழி நடப்பவர்கள். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 200-இன்படி அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார். இதைத் தொடர்ந்து, ஆளுநரை விமர்சிக்காமல், தனிப்பட்ட விமர்சனங்களைக் கூறாமல் தீர்மானத்தின் மீது பேசலாம் என்று சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு சபாநாயகர் அப்பாவு அனுமதியளித்தார். தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் எஸ். வேல்முருகன், கொமதேக-வின் ஈஸ்வரன், மமகவின் ஜவாஹிருல்லா, காங்கிரஸ் கட்சியின் செல்வப் பெருந்தகை, விசிக, மதிமுக, கம்யூனிஸ்ட் கட்சி எம்எல்ஏக்கள் என அனைவரும் முதல்வரின் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

வெளிநடப்பு: இதனிடையே, ஜெயலலிதா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டதை ரத்து செய்ததைக்கண்டித்து அதிமுக எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர். தனித் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே அவையிலிருந்து அவர்கள் வெளியேறினர். அதேபோல், தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாஜகவும் வெளிநடப்பு செய்தது.

முன்னதாக, சட்டப்பேரவையில் பேசிய பாஜக எம்எல்ஏ நயினார் நாகேந்திரன், "சட்டமன்றம் மிகப் பெரிய மாண்பும், மரபும் மிக்கது. இதனை பொதுக்கூட்ட மேடையாக மாற்றிவிடக் கூடாது. கருத்து வேறுபாடு பல இருக்கலாம். வேந்தர்களை நியமனம் செய்வதில் ஆளுநர்களுக்குத்தான் அதிகாரம் வேண்டும் என்று, இதே சபையில் கருணாநிதி தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால், இன்று தீர்மானம் வேறுவிதமாக இருக்கிறது. இது சட்டமன்றத்துக்கு முரண்பாடாக இருப்பதாக நான் கருதுகிறேன். துணை வேந்தர்கள் நியமனத்தில் ஆளுநருக்கே அதிகாரம் உள்ளது என்று அரசியல் சாசனமே சொல்கிறது" என்றார். அதற்குப் பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், "அப்போதெல்லாம் ஆளுநர் அரசுடன் பேசிதான் துணை வேந்தர்களை நியமிப்பார். ஆனால், இப்போது அப்படியல்ல. அதனால்தான் இதை தற்போது கடுமையாக எதிர்க்கிறோம்" என்று கூறினார்.

# பக்தர்கள் வெள்ளத்தில் 'அரோகரா' முழக்கத்துடன் நடந்த திருச்செந்தூர் சூரசம்ஹாரம்

திருச்செந்தூர், நவ. 19-

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கந்த சஷ்டி விழாவில் சூரசம்ஹாரம் நடைபெற்றது. கடற்கரையில் திரண்டிருந்த லட்சக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் சூரபத்மனை வதம் செய்தார் சுவாமி ஜெயந்திநாதர்.

முருக பெருமானின் ஆறுபடைவீடுகளில்இரண்டாம் படை வீடான திருச்செந்தூரில் ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்களில் கந்த சஷ்டி விழா முக்கியமானதாகும். சூரபத்மனை, முருக பெருமான் வதம் செய்த இடம் என புராணங்களில் கூறப்பட்டுள்ளதால் இங்கு நடைபெறும் சூரசம்ஹாரம் உலக பிரசித்தி பெற்றதாகும்.

இந்த ஆண்டு கந்த சஷ்டி விழா கடந்த 13-ம் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கியது. இதனை தொடர்ந்து தினமும் காலை 3 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தரிசனம், உதயமார்த்தாண்ட அபிஷேகம், யாகசாலை பூஜை, மூலவருக்கு உச்சிகால பூஜை, ஜெயந்திநாதருக்கு யாகசாலையில் தீபாராதனை, வெள்ளிச் சப்பரத்தில் ஜெயந்திநாதர் யாகசாலையில் இருந்து எழுந்தருளி, வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு பாடல்களுடன் சண்முகவிலாசம் சேருதல், திருவாவடுதுறை சஷ்டி மண்டபத்தில் ஜெயந்திநாதருக்கு அபிஷேகம், தங்க ரதத்தில் கிரி வீதி உலா போன்ற பல்வேறு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.









விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு அதிகாலை 1 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை, உதயமார்த்தாண்ட அபிஷேகம் மற்றும் இதர கால வேளை பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து யாகசாலை பூஜைகள் தொடங்கின. காலை 9 மணிக்கு மூலவருக்கு உச்சிகால பூஜையும், தொடர்ந்து ஜெயந்திநாதருக்கு யாகசாலையில் தீபாராதனையும் நடைபெற்றது.

பின்னர் வெள்ளிச் சப்பரத்தில் சுவாமி ஜெயந்திநாதர் யாகசாலையில் இருந்து எழுந்தருளி வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு முதலிய பாடல்களுடன், மேளவாத்தியங்களுடன் சண்முகவிலாசம் சேர்ந்தார். அங்கு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

பிற்பகல் 2 மணியளவில் திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் சுவாமி ஜெயந்திநாதருக்கு அபிஷேகம், அங்காரம் நடைபெற்றது.

தொடர்ந்து மாலை 3.50 மணியளவில் சுவாமி ஜெயந்திநாதர், சூரபத்மனை வதம் செய்வதற்காக போர்க்கோலம் பூண்டு சஷ்டி மண்டபத்தில் இருந்து புறப்பட்டார். மாலை 4.10 மணியளவில் கடற்கரையில் எழுந்தருளினார். பின்னர் சூரசம்ஹாரம் தொடங்கியது. முதலில், கஜ முகத்துடன் வந்த சூரபத்மன், சுவாமியை ஆணவத்தோடு மூன்று முறை வலம் வந்து போரிட்டான். அவனை, மாலை 4.41 மணிக்கு ஜெயந்திநாதர் வதம் செய்தார்.

இரண்டாவதாக சிங்க முகத்துடன் வந்த சூரனை 4.58 மணிக்கும், மூன்றாவதாக சுயரூபத்துடனும் போரிட்ட சூரபத்மனை 5.11 மணிக்கும் வதம் செய்தார். பின்னர் மாமரமாக மாறிய சூரனை சேவலாகவும், மயிலாகவும் மாற்றி தன்னுள் ஆட்கொண்டார் ஜெயந்திநாதர். அப்போது பக்தர்கள் எழுப்பிய வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா என்ற கோஷம் விண்ணை பிளக்கச் செய்தது.

சூரசம்ஹாரத்தை காண லட்சக்கணக்கான பக்தர்கள் கடற்கரையில் கூடியிருந்தனர். கடலா கடல் அலையா என வியக்கும் வண்ணம் கடற்கரை முழுவதும் மனித தலைகளாக காட்சியளித்தன. சூரசம்ஹாரம் முடிந்ததும் பக்தர்கள் கடலில் புனித நீராடி விரதத்தை நிறைவு செய்தனர். சூரசம்ஹாரம் முடிந்தும் வள்ளி, தெய்வானையுடன் சுவாமி ஜெயந்திநாதர் சந்தோச மண்டபத்தில் எழுந்தருளினார். அங்கு சுவாமிக்கும், அம்பாளுக்கும் அலங்கார தீபாரதனை நடைபெற்றது. சுவாமி பூஞ்சப்பரத்தில் கிரிபிரகாரம் உலா வந்து திருக்கோயில் சேர்ந்தார். இரவு 108 மகாதேவர் சன்னதி முன்பு சாயா அபிஷேகம் நடைபெற்று பக்தர்களுக்கு சஷ்டி பூஜை தகடுகள் கட்டப்பட்டன.

கந்த சஷ்டி விழாவில் 7 ஆம் திருநாளன்று திருக்கல்யாணம் நடைபெறுகிறது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் இணைஆணையர் மு.கார்த்திக், அறங்காவலர் குழுத் தலைவர் இரா. அருள்முருகன் மற்றும் அறங்காவலர்கள், திருக்கோயில் அலுவலர்கள் செய்திருந்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்கள் மீதான தமிழக அரசின் தனி தீர்மானம் நிறைவேற்றம்

# மருத்துவக் கழிவுகள் கொட்டுவோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை :ஹைகோர்ட்





# தமிழகத்திலும் பாஜக ஆட்சி வருவதற்கு நீண்ட காலம் ஆகாது


| சென்னை / புதுக்கோட்டை | 19.11.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

19.11.2023 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**இராணி இலட்சுமிபாய்** , ஜான்சி பேரரசி (பி.1828) (இ.1858)



**இந்திரா காந்தி** , 3வது இந்தியப் பிரதமர் (பி.1917) (இ.1984)



**தாரா சிங்** , இந்திய மற்போர் வீரர், நடிகர், அரசியல்வாதி (பி.1928) (இ.2012)



## இன்றைய நினைவு நாள்

**எஸ். ஏ. அசோகன்** , தமிழகத் திரைப்பட நடிகர் (பி.1931) (இ.1982)



**சி. வி. வேலுப்பிள்ளை** , இலங்கை மலையக எழுத்தாளர், அரசியல்வாதி, தொழிற்சங்கவாதி (பி.1914) (இ.1984)



**டி. எம். ஜயரத்ன** , இலங்கையின் 14-வது பிரதமர் (பி.1931) (இ.2019)



## பன்னாட்டு ஆண்கள் நாள்

## உலகக் கழிவறை நாள்